வளன்ஆயம்
நொடிதோறும் புதுமைசேர்
தமிழாய்வுத்துறை
தூய வளனார் கல்லூரி [தன்னாட்சி]
திருச்சிராப்பள்ளி- 620002

# எட்டுத்தொகைப்பாடல்களில் குறிஞ்சித்திணை விலங்குகள்

**முனைவர் இரா.முரளி கிருட்டினன்,,**

உதவிப்பேராசிரியர், தமிழாய்வுத்துறை,

தூய வளனார் கல்லூரி, திருச்சிராப்பள்ளி-620002

**ஆய்வுச்சுருக்கம்**

சங்க இலக்கிய எட்டுத்தொகை நூல்களில் அகம் சார்ந்த நூல்கள் ஐந்து. அவை திணைகளை அடிப்படையாகக் கொண்டு பாடப்பெற்றுள்ளது. ஐந்து திணைகளில் ஒன்று குறிஞ்சித் திணையாகும். குறிஞ்சித் திணைப்பாடல்கள் மலைகளின் பிறப்பிடமாக அமைகின்றது. இயற்கையோடு வாழ்ந்த மனிதனின் முதல் இருப்பிடமாகக் குறிஞ்சி நிலம் திகழ்ந்துள்ளது. வளமிக்க குறிஞ்சி நிலத்தில் மனிதனோடு வாழ்ந்த விலங்குகளின் நிலையையும், அவற்றின் செயல்பாடுகளையும் ஆராயும் நோக்கில் இவ்ஆய்வுக்கட்டுரையானது அமைகின்றது.

**கலைச்சொற்கள்**

**வேழம், மந்தி, பிடி, காந்தள் மலர், நெடுஞ்சுனை, பாறை, கன்று**

**முன்னுரை**

மலையும் மலை சார்ந்த பகுதியான குறிஞ்சித்திணையானது ஓங்கி உயர்ந்துக் காணப்படும் மலைகளின் பிறப்பிடமாவும், வளங்கள் நிறைந்தாகவும் காணப்படுகின்றது. சங்க இலக்கியங்களில் குறிஞ்சித் திணைப் பாடல்களைப் பாடுவதில் வல்லவர் கபிலர் ஆவார். **‘இயற்கை எழிலின் ஒலக்கமாய்-இலங்கும் மலைகளின் கொள்கை அழகுக்குத் தம் நெஞ்சையே திரையாகக் கொடுத்துத் திளைப்பவர் கபிலர்’’**[1] என்ற கூற்று குறிஞ்சித்திணையின் சிறப்பினையும், அதை ரசித்துப் பாடுவதில் வல்லவரான கபிலரின் திறத்தினையும் எடுத்துரைக்கின்றது.

**‘கபிலர் பாக்களில் நாம் காணும் மலைகள் வளம் நிறைந்தவை. கனி சுமக்கும் பலா, வாழை மரங்களும், மணம் பரப்பும் வேங்கை, காந்தள் மலர்களும், கவின் ஒழுகும் மயில், கிளி முதலான பறவைகளும், யானை, புலி, குரங்குக்குட்டி, காட்டுப்பன்றி முதலிய விலங்கினங்களும் விரவப் பெற்று கபிலர் வழங்கும் குறிஞ்சிக் காட்சிகள் இயற்கைப் பொருளின் செறிவு மிக்குச் சிறந்துள்ளன’’** [2] என்ற மு.வரதராசனாரின் கூற்று குறிஞ்சித் திணையின் காட்சிகளைக் கவினுறத் தருகிறது.

குறிஞ்சித் திணையில், கிளிகள், குருவிகள், சேவல்கள் போன்ற பறவையினங்களுடன், யானை, கரடி, குரங்கு, காட்டுப்பன்றி, முள்ளம்பன்றி, கருங்குரங்கு, சிங்கம், செந்நாய், புலி போன்ற விலங்கினங்கள் பற்றிப் பாடப்பட்டுள்ளன.

***1.யானை***

குறிஞ்சித்திணை விலங்குகளில் உருவத்தில் பெரிதாக இருக்கும் யானைகள், கூட்டமாக வாழ்ந்திடுவதைப் பெரிதும் விரும்பக் கூடியதாகும். **“யானை தன்னையும் தன் துணையையும் பகை விலங்குகளிடமிருந்து பிற இடர்களிலிருந்தும் காத்துக் கொள்ளும் வலிமையைப் பெற்றிருக்கிறது.”** [3] என்கிறார் மு.வ. இயல்பாகவே ஏனைய விலங்குகளைவிட அறிவு நிரம்பியதாக யானைகள் உள்ளன.

யானைகள் தமது கூட்டத்தின் மீதும் கன்றுகளின் மீதும் மிகுந்த அன்பினை வெளிப்படுத்தும் குணமுடையதாகும். கிணறு ஒன்று அரைகுறையாய் தோண்டப்பட்ட நிலையில் இருக்குமிடத்து, இலைகளும் தழைகளும் அதனை மூடியிருப்பதைக் கண்ட யானைக் கூட்டம், வேடர்கள் வைத்திருக்கும் படுகுழி என்று நினைத்து அதனை மூடுவதை,

**‘வல்வாய்க் கணிச்சிக் கூழார் கோவலர்**

**ஊறாது இட்ட உவலைக் கூவல்**

**வேண்கோடு நயந்த அன்பில் கானவர்**

**இகழ்ந்து இயங்கு இயவின் அகழ்ந்த குழிசெத்து**

**இருங்களிற்று இனநிரை துார்க்கும்’’** [4]

என்று யானையின் அறிவார்ந்த செயலை அகநானூற்றுப் பாடல் புலப்படுத்துகின்றது.

**‘களிறு ஒன்று வழுக்கலான பள்ளத்தில் விழுந்துவிட, பெண்யானை பெருமரங்களின் கிளைகளை முறித்து பள்ளத்தில் இடுகிறபோது, களிறு படிகளாகப் பயன்படுத்தி மேலே ஏறி வருகிறது’’** [5] என்று பெண்யானையின் செயல்பாட்டினை மு.வரதராசனார் தமது உரையில் சிறப்புற கூறியுள்ளார். இதனை,

**‘மாரியங் கிடங்கின் ஈரிய மலர்ந்த**

**பெயலுறு நீலம் போன்றன˙ விரலே**

**பாஅய் அவ்வயிறு அலைத்தலின் , ஆனாது**

**ஆடுமழை தவழும் கோடுயர் பொதியில்**

**ஓங்கிருஞ் சிலம்பில் பூத்த**

**காந்தளங் கொழுமுகை போன்றன சிவந்தே’’** [6]

என அகநானூறு யானையின் செயல்பாட்டினைக் கூறுகிறது. யானைக் கன்று ஈனுமிடத்து ஆண்யானை பெண்யானையுடன் நின்று காவல் புரிவதுடன் ஈன்ற கன்றுடன் இரவு தங்கிடும் தன்மையுடையதாகக் குறிஞ்சி நிலத்து யானைகள் காணப்படுவதை,

**‘ஒளி திகழ் விலக்கத்து, ஈன்ற மடப்பிடி**

**களிறு புறங்காப்ப, கன்றொடு வதியும்’’** [7]

நற்றிணைப் பாடல் படம் பிடித்துக் காட்டுகிறது.

பிடியானையின் பசியினைப் போக்க எண்ணிய களிறு தினைக்கதிரை அழித்திடும் செயலை அகநானூற்றிலும், தினைப்புனக் காவல் காப்போர் ஞெகிழியால் யானையை விரட்டுவதைக் குறுந்தொகையிலும் சுட்டப்பட்டுள்ளது.

**‘காம்பின் விளை கழையுடைந்த கவண்விசைக்**

**கடியிடில் கனைசுடரமயத்து’’** [11]

என்ற அகநானூற்றுப் பாடல், யானைக் கூட்டத்தையும், அதனை விரட்டிடும் கானவர்களின் செயல்பாட்டினையும் கூறுகிறது. மேலும், காட்டு யானை தினைப்புனத்தை அழிப்பதைக் கண்ட கானவன் ஒருவன், அம்பு எய்திட, அம்பு தைக்கப் பெற்ற காட்டுயானை மிகுந்த கோபத்துடன் வருவதாக காட்டுயானையின் செயலினைக் குறிஞ்சிப்பாட்டில் காணமுடிவதுடன், இசைக்கு மயங்கியதாக யானைகள் இருந்துள்ளத்தை அகநானூறு காட்சிப்படுத்துகிறது.

இதனைப் போன்று குறிஞ்சிப்பாட்டில் களிறு கூட்டமாகக் காணப்படுவதையும், தலைவியையும் தோழியையும் தலைவன் நீருனுள் இருந்து காப்பாற்றிடும் நிகழ்வு கூறப்படுகிறது.

**‘கார்ப்பெய ஒருமிற் பிளிறிச் சீர்த்தக**

**இரும்பிணர்த் தடக்கை யிருநிலஞ் சேர்த்திச்**

**சினந்திகழ் கடாஅஞ் செருக்கிமரங் கொல்**

**மையல் வேழ மடங்கலி னெதிர்தர**

**உய்விட மறிே மாகி பொய்யெனத்**

**திருந்துகோ லெல்வளை தெழிப்ப நாணுமறந்து**

**விதுப்புறு மனத்தேம் விரைந்தவற் பொருந்திச்**

**சூருறு மஞ்ஞையி னடுங்க பார்கோல்**

**உடுவுறும் பகழி வாங்கிக் கடுவிசை**

**அண்ணல் யானை யணிமுகத் தழுதலிற்**

**புண்ணுமிழ் குருதி முகம்பாய் திமிதரப்**

**புள்ளி வரிநுதல் சிதையா நில்லா**

**தயர்ந்து புறங் கொடுத்த பின்னர்''** [15]

என்று கனல்மிகு களிற்றிடமிருந்து மங்கையர்கள் இருவரைக் காப்பாற்றிய நிகழ்வினைச் சுவைபடச் சித்திரிக்கிறது குறிஞ்சிப்பாட்டு.

பண்டைய காலத்தில் மதங்கொண்ட யானையினை வெளியில் அழைத்து வரும்போது மக்களை எச்சரிக்கையாக இருக்கும்படியும், யாரும் வெளியில் வரவேண்டாம் என பறையடித்து சொல்லும் வழக்கமிருந்ததைக் கலித்தொகை,

**'நிறை அழி கொல் யானை நீர்க்கு விட்டாங்கு**

**பறை அறைந்தல்லது செல்லற்க! என்னா''** [16]

எனும் பாடலால் அறியமுடிகிறது. மேலும்,

**'பறையறைத்தல்லது செல்லற்க- வெரூஉப்பறை**

**நுவலும் பரூஉப்பெருந் தடக்கை , வெருவரு**

**செலவின் வெகுளிவேழம்''** [17]

என பொருநராற்றுப்படையும் முரசறைந்து தெரிவிக்கின்ற நிகழ்வாக யானையின் செயல்கள் அமைந்துள்ளன.

உயர்ந்த மலைகளும் வெண்ணிறமான அருவியையும் உடைய குறிஞ்சி நிலத்தில்,

**'ஒலிவெள் ளருவி ஓங்குமலை நாடன்**

**சிறுகண் பெருங்களிறு வயப்புலி தாக்கித்**

**தொல்முரண் சோருந் துன்னருஞ் சாரல்**

**நடுநாள் வருதலும் வரூஉம்**

**வடுநாண லமே தோழி நாமே''** [18]

புலியும் யானையும் போரிடும் மலைச்சாரலாகவும். மக்களால் நெருங்குதற்கு அரிய இடமாகவும் இருந்துள்ளதைச் சங்கப்பாடல்களின் மூலமாக அறியமுடிகிறது.

**'பரியது கூர்ங்கோட்டது ஆயினும் யானை**

**வெரூஉம் புலி தாக்குறின்''** [20]

என வள்ளுவரும்,

**' நெடுங்கை வனமான் கடும்பகை உழந்த**

**குறுக்கை இரும்புலிக் கோள்வல் ஏற்றை''** [21]

என குறுந்தொகையும்,

**'படு கடுங் களிற்றின் வருத்தம் சொலிய''** [22]

என அகநானூறும் 'களிறு' பற்றி உரைக்கின்றன. பார்ப்பதற்குப் பெரியதாக, அறிவுதனில் சிறியதாக, வலிமையுடையதாக களிறு காணப்பட்டுள்ளது. மக்களும் விலங்குகளும் இயற்கையுடன் ஒன்றி வாழ்ந்திட்ட வாழ்க்கை முறையைக் குறிஞ்சித்திணைப் பாடல்கள் சிறப்பாகக் காட்டுகின்றன.

**2.புலி**

சங்க காலம் முதல் இன்றைய காலம் வரை வலிமை மிகு விலங்காகக் கருதப்படுவது புலி ஆகும். மலையைச் சார்ந்துள்ள இடங்களில்தான் புலிகள் அதிகம் வாழ்ந்துள்ளன. சங்க இலக்கியப் பாடல்களில் செந்நாய், மரையினம் முதலியவைகளைக் கொன்று தின்று புலியினம் வாழ்ந்துள்ளது.

புலிக்கும் யானைக்கும் நிறைய இடங்களில் போர் நடைபெற்றுள்ளதைப் புலவர்கள் பாடியுள்ளனர். வீரத்திற்கு உவமையாகப் புலி பாடப்பட்டுள்ளது. **'போரினில் யானைப் புலியை வெற்றிப் பெறுதலும், புலி வலுவிலந்துப் போவதும் உண்டு''** [23] என்கிறார் அ.முத்துசுவாமி. சிவந்த கண்களையும் உடலில் வளைந்த கோடுகளையும் உடைய புலியானது இருபக்கத்தினையும் ஒரே நேரத்தில் பார்க்கும் இயல்புடையது என்பது இவ்விலங்கினத்தின் தனிச்சிறப்பாகும்.

**'நெடுமலை அடுக்கம் கண் கெட மின்னி**

**படுமழை பொழிந்த பானாட் கங்குல்**

**குஞ்சரம் நடுங்கத் தாக்கி, கொடு வரிச்**

**செங்கண் இரும்புலி குழுமம் சாரல்''** [24]

என்பதில் உயர்ந்த மலையின் பக்கங்களின் கண்ணின் ஒளி கெடுமாறு மிக்க மழைப்பொழிகின்ற நள்ளிரவில் வளைந்த கோடுகளையும் சிவந்த கண்களையும் உடைய பெரிய புலி, யானையை நடுங்குமாறு தாக்கியது என்கிறார் மதுரைப் பாலாசிரியர் நற்றாமனார் என்னும் புலவர். இதனைப் போன்று,

**'கருங்கால் வேங்கை வீயுகு துறுகல்**

**இரும்புலிக் குருளையின் தோன்றுங் காட்டின''** [25]

என்பதில் குருளை என்பது நரி, நாய், பன்றி, புலி, மான், முயல் இவற்றின் இளமைப் பெயர்களைக் குறிக்கக் கூடியதாகும்.

**'வேங்கையின் மலர்கள் கருமை நிறமுடைய பாறையின் மீது**

**கொட்டிக் கிடப்பதால் தலைவன் புலிக்குட்டி என்று கருதி அஞ்சக்**

**கூடும். புலிக்குட்டி அங்கிருந்தால் புலிகள் நிறைய இருக்கலாம் என்ற**

**என்ன மிகுதியும் தோன்றும்''** [26]

என்று தோழி கூறுவதிலிருந்து புலிகளும் கூட்டமாக வசிக்கும் இயல்பினை உடையது என்பதை அறியமுடிகிறது.

**'அரும்பு அற மலர்ந்த கருங்கால் வேங்கை**

**மாத் தகட்டு ஒள்வீ தாய துறுகல்**

**இரும் புலி வரிப்புறம் கடுக்கும்''** [27]

எனப் புறநானூற்றுப் பாடலில் வேங்கை மலர்கள் வரிவரியாகக் கொட்டிக் கிடப்பது பெரிய புலியின் மீதுள்ள கோடுகளைப் போன்றுள்ளது என்பதில் வயதில் மூத்த புலி இனங்களைப் பற்றியும் குருதியினை மிகுந்த விருப்பத்தினுடன் உண்ணும் அஞ்சத்தக்க மிருகமாகப் புலி இருக்கிறது. அத்தகைய புலி தனக்கு எதிரே வரும் இளமை வாய்ந்த களிற்றினை நோக்குவதை,

**'குருதி வேட்கை வருகெழு வயமான்**

**வலிமிகு முன்பின் மழ களிறு பார்க்கும்**

**மரம் பயில் சோலை மலிய''** [28]

என்கிறது நற்றிணை. மேலும், காட்டு யானை வலிய புலியோடு போரிட்டு வருந்தியமையால் அதனின் தலை பிளவுப்பட்டு வலியால் வருந்தியது. பின்னர் நீர் அருந்துவதற்கு சென்று தும்பிக்கையால் சுனை நீரை உறிஞ்ச முற்படுமிடத்து, இறந்து விடுகிறது. புலியின் வலிமை யானையைத் தாங்கி இறக்கச் செய்யுமளவிற்கு உள்ளது. இதனைப் போன்று, **'கருநிறப் பிடியொடும் கன்றுடன் கூடிய அகன்ற வாயினையும் பெரிய கையினையும் உடைய களிற்றினை இரையாகக் கொள்ளும்படி புலி ஒன்று உலவத் திரிகிறது''** [30] என்கிறார் கு.வெ.பாலசுப்ரமணியன். இக்கூற்றினை,

**'இரும்பிடி கன்றொடு விரைஇய கயவாய்ப்**

**பெருங்கை யானைக் கோள்பிழைத்து, இரீஇய**

**அடுபுலி வழங்கும் ஆர்இருள் நடுநாள்''** [31]

என்கிறது அகநானூறு. ஆண்மானை அடித்துக் கொன்று தின்றுவிட்டு கருங்கற் பாறையினில் கிடத்தி, அதனின் மீதியை விட்டுச் செல்லும் புலியைப் பற்றி காரிக்கண்ணனார்,

**'கருங் கல் வியல் அறைக் கிடப்பி, வயிறுதின்று**

**இரும் புலி துறந்த, ஏற்றுமான் உணங்கல்''** [32]

என்பதில் புலியின் வேட்டையாடும் திறனைப் பார்க்க முடிகிறது. சங்க இலக்கியப் பாடல்களில் புலிகளின் எண்ணிக்கை அதிகமாக இருந்துள்ளமையுடன், அவை யானை, மான், செந்நாய் போன்ற விலங்கினங்களை வேட்டையாடி உண்பதையும், கூட்டமாகக் குட்டிகளுடன் வாழ்வதையும் பார்க்க முடிகிறது.

**புலிப்பால் தாலி**

குறிஞ்சித்திணையில் வாழ்ந்திட்ட மக்கள் கொடிய விலங்குகளை வேட்டையாடியும் காட்டுப் புனங்களில் காவல் புரியும் தொழிலைச் செய்து வாழ்ந்துள்ளனர். **'புலிகளைக் கொன்று வேட்டையாடி வந்த வீரமகன்கள் அதனின் பற்களை அணிந்து கொள்ளுமாறு கொடுக்க,பெண்கள் அதனைத் தாலியாக அணிந்துக் கொண்டனர்''** [33] என்பார் அ.முத்துசிவம். முதலில் பெண்கள் அணிந்து கொண்டது புலிப்பால் தாலியாகும். அதன் பின்னர் தான் தாலி அணியும் வழக்கம் உருவானது என்கிறார்.

**3.கரடி**

குறிஞ்சித்திணையின் மலைகளில் 'ஏற்றை' என்று குறிப்பிடப்படும் புலி, கரடிகள் வசித்துள்ளதையும், புலி இனம் பற்றி முன்னரே கூறப்பட்டுள்ளமையால், இவ்விடத்து கரடி குறித்து ஆராயப்பட்டுள்ளது.

வலிமை பொருந்தியதாகவும், கரிய நிறமுடையதாகவும் கரடிகள் காணப்பட்டுள்ளன. கருமையான ரோமங்களை உடையதாகக் காணப்படுதுடன், குறிஞ்சித்திணையிலும், சிலநேரங்களில் மலைக்குக் கீழுள்ள முல்லை நிலக் காடுகளிலும் கரடிகள் வாழ்ந்துள்ளன.

**'ஈசல் புற்றுக்ளின் குளிர்ந்த குளிர்ந்த மேற்புறத்தே தங்கியிருக்கின்ற புற்றாஞ்சோறாகிய இரையினைப் பெரிய கையினையுடைய ஆண்கரடி அகழ்ந்தெடுக்கும்போது அதன் தொங்கும் தோல் உறைக்குள் இருக்கும் கூரிய நகம் பட்டு பாம்பின் வலிமை ஆழிந்துபடும்''**[34] என்கிறார் இரா.செயபால். இதனை,

**'ஈயற் புற்றத்து ஈர்ம் புறத்து இறுத்த**

**குரும்பி வல்கிப் பெருங்கை ஏற்றை**

**தூங்கு தோல் துதிய வள்உகிர் கதுவலின்**

**பாம்பு மதன் அழியும்''** [35]

என்கிறது அகநானூறு. நல்ல மழைப் பெய்கின்ற மாரிக்காலத்து கரடிகள் கூட்டமானது வைகறைப் பொழுதில் மேய்கின்ற வழித்தடம் என்பதை,

**'மாரி எண்கின் மலைச்சுர நீள்இடை**

**நீ நயந்து வருதல் எவன்''** [36]

தலைவன் வரும் வழியில் கரடிக் கூட்டம் மேய்வதை தலைவி கூறுகிறாள். மேலும், குறிஞ்சி நிலத்தின் மலைகளில் கரடிக் கூட்டங்கள் இருந்துள்ளதைச் சங்க இலக்கியப் பாடல்கள் காட்டுகின்றன. மக்கள் காட்டு விலங்குகளுக்கு அஞ்சி வாழ்ந்திட்டதை குறிஞ்சித்திணைப் பாடல்களில் காணமுடிவதுடன், மனிதர்களுக்கும், விலங்குகளுக்கும் எவ்வித இடையூறுமின்றி பரண்கள் அமைத்தும், கவண் ஒலி எழுப்பியும், தீப்பந்தம் காட்டியும் விலங்குகளை வேட்டையாடி மகிழ்ந்துள்ளதையும், இறந்துபட்ட விலங்கினங்களை இறைச்சியாக உண்டதையும் சங்கப் பாடல்கள் காட்டுகின்றன.

**4.காட்டுப்பன்றி**

கரிய நிறமுடையதாகப் பன்றிகள் உள்ளன. சங்க இலக்கியத்தின் குறிஞ்சித்திணையில் பன்றிகள் பற்றி பாடப்பட்டுள்ளன.

பன்றி, காட்டுப்பன்றி, முள்ளம்பன்றி என்று மூன்று வகையாக உள்ளன. காட்டுப்பன்றி காடுகளில் அலைந்தும் திரிந்தும் சேற்றினில் உறழ்ந்தும் இறக்குமிடத்து, அதனின் மேலே வெண்மையான கூதளஞ் செடியினின்று கொட்டிய மலர்களும், பூந்தாதுகளும் மேலே உதிர்ந்துள்ளமையால் அந்தப் பன்றியானது, **“பொன் உரைத்து மாற்று அறியும் கட்டளைக் கல்லைப் போன்று அப்பன்றி அழகுறக் காட்சி தந்தது பின்னர் நன்கு கிளைத்து வளர்ந்த சிறிய தினையின் முற்றிய கதிரினை மேய்ந்து இனிது உறங்கியது”**[38] என்கிறார் இரா.செயபால். இதனை,

**“வயிரத் தன்ன வைரந்து மருப்பின்**

**வெதிர்வேர் அன்ன பரூஉமயிர்ப் பன்றி**

**பறைக்கண் அன்ன நிறைச்சுவை பருகி”**

என்று அகநானூறும் காட்டுப்பன்றி பற்றிக் கூறுகின்றன.

**5.குரங்குகள்**

ஆண்குரங்குகள், பெண்குரங்கு என்று அழைக்கப்படும் மந்திகள் குறிஞ்சித்திணையில் அதிகளவில் வாழ்ந்துள்ளன.

**“மரம் ஏறுவதில் வல்ல மந்திகள் மரங்கள் செறிந்திருக்கும்**

**நிலையில் ஏறியறியாத மரங்கள்”** [39]

நிறைய உள்ளன. மந்திகள் ஏறாத மரங்கள் குறிஞ்சித்திணையில் இருப்பதை நோக்குமிடத்து, மரங்கள் அழிக்கப்படாமல், எண்ணற்ற வகையான மரங்களைக் கொண்டு மலை முழுவதும் வளம் நிரம்பியிருந்ததை அறியமுடிகிறது.

**“மந்தியும் அறியா மரம்பயில் ஒருசிறை”** [40]

என நற்றிணையும் கணவனாகிய கடுவன் இறந்துபட, கைம்மை வாழ்வை விரும்பாத குரங்கு தானும் இறந்துபடுவதற்கு முற்படுமிடத்து, தன் குட்டியை இனத்திடும் கொடுத்துவிட்டு உயிர்விடுகிறது. இதனை,

**“கருங்கட் டாக்கலை பெரும்பிறி துள்றெனக்**

**கைம்மை யுய்யாக் காமர் மந்தி”** [41]

என்று கூறுகின்றது குறுந்தொகை.

குரங்கு இரண்டு விதமான பண்புநலன்களை உடையதாக உள்ளன. 1.திருட்டுக் குரங்கு 2.முரட்டுக் குரங்கு என்ற இரண்டும் ஆகும். **“பிறர் சோர்வுற்றிருக்கும் நேரத்தை அறிந்து அவர்களிடம் உள்ள உணவுப் பொருட்களைக் கவர்ந்து செல்லும் குணமுடையது மந்திகள் ஆகும்”** [42] என்கிறார் அ.முத்துசுவாமி. இவ்வகைதனில் குறிஞ்சி மலைதனில் பாறைகளின் மீது சிவந்த தினையானது பரப்பிக் காய

வைக்கப்பட்டுள்ள போது, கொடிச்சி ஒருத்தி தினைக்குக் காவல் காத்துக் கொண்டிருக்குமிடத்து, சில பெண் குரங்குகள் தங்கள் குட்டிகளுடன் வந்து தினையைக் கவர்ந்திடும் முயற்சிதனில் ஈடுபடுகின்றன. தினைப்புனம் காத்தலில் சோர்வுற்ற கொடிச்சி சுனைநீரை அருந்திடச் செல்கிறாள். இதனைத் தக்க நேரமாகப் பயன்படுத்திக் கொள்ளும் திருட்டுக் குரங்குகள் தினைகளைக் கைகளில் அள்ளிக் கொண்டு மரத்தின் மீது ஏறிக் கொள்கின்றன. இந்நிகழ்வினை இருத்தையூர் கொற்றன் என்னும் புலவன்,

**“கிரைவளை முன்கை நேரிழை மகளிர்**

**இருங்கல் வியலறைச் செந்தினை பரப்பிச்**

**சுனைபாய் சோர்வடை நோக்கிச் சினையிழந்து**

**பைங்கண் மந்தி பார்ப்பொடு கவரும்”** [43]

என்பதில் திருட்டுத்தனம் உடைய மந்திகளைச் சங்கப் பாடல்கள் காட்டுகிறது. இதனைப் போன்று, பின்விளைவுகளைப் பற்றிச் சிந்திக்காத முரட்டுக் குரங்குகளையும் இலக்கியங்களில் காணமுடிகிறது.

பயம் என்பதை அறியாத முரட்டு மந்திகள் மலையின் கண்ணுள்ள ஒரு பெரிய தேன்கூட்டை விரல்களால் களைத்து விடுகிறது. அப்பொழுது தேன்பூச்சிகள் குரங்கின் உடம்பு முழுவதும் கடிப்பதைக் கபிலர்,

**‘கருவீரன் மந்திக் கல்லா வன்பற**

**ழருவரைத் தீந்தே னெடுப்பி யயலே**

**துருகெழு நெடுஞ்சினைப் பாயும்”** [44]

என்று சுவைபடப் பாடியுள்ளார்.

“உண்ட மயக்கம் தொண்டனுக்கும் உண்டு“ என்ற பழமொழிக்கேற்ப தேனை உண்ட மந்திகள் மயக்கத்தில் தள்ளாடுவதைக் கபிலர்,

**‘கோழிலை வாழைக் கோண்மிகு பெருங்குலை**

**ஊழுறு தீங்களி உண்ணுநர்த் தடுத்த”** [45]

என்றும்,

**‘சாரற் பலவின் களையொடுழ் படு**

**பாறை நெடுஞ்சுனை விளைந்த தேறல்**

**அறியா துண்ட கடுவின் அயலது**

**அறிவளர் சாந்தம் ஏறல் செல்லாது**

**நறுவீ அடுக்கத்து மகிழ்ந்துகள் படுக்கும்”** [46]

என்பதில் மந்திகள் தேனை உண்டு மயக்கத்திலிருந்ததை அறியமுடிகிறது.

**தொகுப்புரை :**

சங்க இலக்கியப் அகப்பாடல்களில் குறிஞ்சித் திணைப்பாடல்கள் மலைகளின் பிறப்பிடமாக அமைந்துள்ளன. குறிஞ்சித்திணையில் கொடிய விலங்குகளாகக் கருதப்படும் யானை, புலி, கரடி மற்றும் குரங்குகள் வாழ்ந்துள்ளதைப் பார்க்குமிடத்து மலைகளின் அமைப்பு விலங்குகள் வாழ்வதற்கான சிறந்த தகவமைப்பை உடையதாக இருந்துள்ளது என்பதையும், அவ்விலங்குகளின் இயல்பினையும் அவற்றின் அறிவார்ந்த செயல்பாட்டையும் எட்டுத்தொகை அகப்பாடல்களின் வழி அறியமுடிகின்றது. மனிதன் இயற்கையோடு இயைந்த வாழ்க்கை வாழ்ந்தான் என்பதற்கு குறிஞ்சித்திணைப்பாடல்கள் ஆதரமாக அமைந்துள்ளதைக் காணமுடிகின்றது.

**அடிக்குறிப்பு**

1. *மு.வரதராசன், பழந்தமிழ் இலக்கியத்தில் இயற்கை, ப-108*
2. *மேலது, ப-108*
3. *மேலது, ப-329*
4. *அகநானூறு, பா-21*
5. *மு.வரதராசன், பழந்தமிழ் இலக்கித்தில் இயற்கை, ப.329*
6. *அகநானூறு, பா-349*
7. *நற்றிணை பா-399*
8. *மேலது, பா- 393*
9. *கலித்தொகை, பா-41*
10. *குறுந்தொகை. பா- 375*
11. *அகநானூறு , பா-309*
12. *குறிஞ்சிப்பாட்டு, பா101-175*
13. *அகநானூறு, பா-208*
14. *அ.முத்துச்சுவாமி, இலக்கியத்தில் விலங்குகளும் பறவைகளும், ப-8*
15. *குறிஞ்சி பாட்டு, பா.வ. 103-175*
16. *கலித்தொகை, பா-56*
17. *பொருநறாற்றுப்படை, பா.வ -171-173*
18. *குறுந்தொகை, பா-56*
19. *உ.வே.சாமிநாதய்யர்( உ.ஆ), குறுந்தொகை,ப-50*
20. *திருக்குறள், குறள்,-599*

21. குறுந்தொகை ,பா-141

22. அகநாநுாறு, பா-8

23. அ.முத்துசுவாமி, இலக்கியத்தில் விலங்குகளும், பறவைகளும், ப-32

24. அகநாநுாறு,பா-92

25. குறுந்தொகை, பா-98

26. உ.வே.சா(உ.ஆ) குறுந்தொகை, ப-52

27. புறநானுாறு, பா-202

28. நற்றிணை, பா-192

29. அகநாநுாறு, பா-119

30. கு.வெ, பா (உ.ஆ), அகநானுாறு, ப, 362

31. அகநாநுாறு ,பா-118

32. மேலது, -108

33. அ.முத்சுவாமி, இலக்கியத்தில் விலங்குகளும் பறவைகளும், ப-48

34. இரா. செயபால் , அகநானுாறு, ப-23

35. அகநாநுாறு, பா-8

36. நற்றிணை, பா-192

37. இரா. செயபால், அகநானுாறு, ப-320

38 அகநாநுாறு, பா-178

39. கு.வெ.பலசுப்பிரமணியன் (உ.ஆ), நற்றிணை, ப-356

40. நற்றிணை, பா-194

42. குறுந்தொகை, பா-69

43. அ.முத்துசுவாமி, இலக்கியத்தில் விலங்குகளும் பறவைகளும், ப-66

44. அகநாநுாறு, பா-218

43. மேலது, பா-179

45. மேலது, பா-38

46. மேலது, பா-296